**வீதிப் பாதுகாப்புக்கான தேசிய மன்றம் - 2019**

---

## 1.1 அபிப்பிராயம்

வீதிப் பாதுகாப்புக்கான தேசிய மன்றத்தின் 2019 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புகள், பொழிப்புடனான முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2019 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்ட மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன்.
இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களினது கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்பு எனும் பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் அதனோடு தொடர்புடைய தரப்பினரதும் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்தல் மற்றும் சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில்,நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் ஆற்றலினை மதிப்பீடு செய்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். நிறுவனத்தை கணக்கொழிப்பதற்கு முகாமைத்துவம் கருதுமாயின் அல்லது மாற்றீடு இல்லாதவிடத்து செயற்பாடுகளை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தாலேயொழிய தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கருவின் அடிப்படையில் கணக்குகளை பேணுதல் மற்றும் நிறுவனம் தொடர்ந்தியங்குவதற்குரிய விடயங்களை வெளிப்படுத்தல் என்பன முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

மன்றத்தின் நிதி அறிக்கையிடல் நடைமுறை தொடர்பான பொறுப்பு குறிப்பிட்ட தரப்பினரதாகும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மன்றத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக ஏடுகளும் அறிக்கைகளும் பேணப்படுதல் அவசியமாகும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களது கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரது பொறுப்பு)**

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலை வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கிய அறிக்கையை வழங்குவது என்பது எனது நோக்கமாகும். நியாயமான சான்றுறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான சான்றுறுதிப்படுத்தலொன்றாக இருப்பினும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும்போது அது எப்போதும் போதியளவு தவறான கூற்றுக்களை வெளிப்படுத்துவதற்கான உறுதிப்படுத்தல் அல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் ஏற்படக்கூடும். இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோர் மேற்கொள்ளும் பொருளாதாரத் தீர்மானங்களுக்கு தாக்கம் ஏற்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும்போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளலும் எனது அபிப்பிரயாத்திற்கான அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளை இனங்காணாமையால் ஏற்படும் தாக்கம் பெரிதாகும்.தவறான கூட்டிணைவு,போலி ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டைப் புறக்கணித்தல் என்பன மோசடி ஏற்படக் காரணமாகலாம்.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு மன்றத்தின் உள்ளக கட்டுப்பாட்டை அறிந்திருந்தபோதும் உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வத் தன்மைக்கான அபிப்பிராயத்தை வெளிப்படுத்துவதற்குக் கருதவில்லை.

- முகாமைத்துவம் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் உசிதமான தன்மையையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையையும் மதிப்பாய்வு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமை காரணமாக மன்றம் தொடர்ந்தியங்குவது தொடர்பாக போதியளவு நிச்சயமற்ற தன்மை உள்ளதா என்பது தொடர்பாக பெறப்பட்ட கணக்காய்வுச் சான்றினடிப்படையில் கணக்கீடு சம்பந்தமான மன்றத்தின் தொடர்ந்தியங்கும் தன்மை தொடர்பான அடிப்படையைப் பயன்படுத்தலாம் எனத் தீர்மானிக்கப்பட்டது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் எண்ணுவதாயின் நிதிக்கூற்றுக்களிலுள்ள அத்தகைய வெளிப்படுத்தல்களுடன் எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்த வேண்டும். அந்த வெளிப்படுத்தல் போதுமானதாக இல்லாதிருப்பின் எனது அபிப்பிராயம் மாற்றத்திற்குள்ளாக வேண்டும். எனது முடிவானது கணக்காய்வு அறிக்கைத் தினம் வரையான கணக்காய்வுச் சான்றுகளின் அடிப்படையிலானவை. எவ்வாறாயினும், எதிர்கால சம்பவங்கள், அல்லது நிலைமை காரணமாக தொடர்ந்தியங்கும் தன்மை முடிவுக்கு வரலாம்.

- வெளிப்படுத்தல்களை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள்

மற்றும் சம்பவங்களை உசிதமானவாறும் நியாயமானவாறும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

இயலுமானவரை மற்றும் தேவையான எச் சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்குமிடத்து, நிறுவகத்தின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பாய்வு செய்யக்கூடியவாறு அதன் ஒழுங்கமைப்பு,முறைமை, நடைமுறைகள்,ஏடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமை, நடைமுறைகள்,ஏடுகள்,அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகப் பேணப்பட்டுள்ளனவா என்றும்,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டம் அல்லது மன்றத்தின் பணிப்பாளர் சபையால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாட்டிற்கு இணங்க மன்றம் செயற்பட்டுள்ளதா என்றும்,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்றும்,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனுடனும் ஆக்கபூர்வமாகவும் கால வரம்பிற்குள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா என்றும்,

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்களது முகாமைத்துவத்தினை பொதுவான மற்றும் குறிப்பிடப்பட்ட அதிகாரத்துடன் நடைமுறைப்படுத்தல், தொடர்புடைய அறிக்கையிடல் நியமங்களுக்கிணங்க நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்கான கணக்கீட்டு நடவடிக்கைகளைப் பேணுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் குறிப்பான அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களில் பிரவேசித்தல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணகளித்தகைமையை தற்போதுள்ள சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியினுள் கணக்கிணக்கம் செய்தல் மற்றும் வேறுபாடுகள் இருப்பின் அவை தொடர்பாக உரிய நடவடிக்கை எடுத்தல் தொடர்பான நியாயமான உறுதிப்பாட்டை பெறுவதற்குப் போதிய ‘‘சிறந்த முறையில் திட்டமிடப்பட்ட’’ உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையை நிறுவகம் பேணுதல் அவசியமாகும்.

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக பொருட் கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்படவில்லை | பொருட் கொள்வனவுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்ட போதும் நிர்வாக சபையின் அங்கீரத்திற்கு சமர்ப்பிக்க முடியாமல் இருந்ததாக | சுற்றறிக்கை அறிவுறுத்தலுக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| **(ஆ)** | 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 8(1) ஆம் பிரிவு மற்றும் 2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.2.4 ஆம் பிரிவு | நிதியாண்டு ஆரம்பமாவதற்கு 03 மாதங்களுக்கு முன்னர் மன்றம் வரவு, செலவுத் திட்டத்தை அங்கீகரிக்க வேண்டிய போதும், மீளாய்வாண்டின் வரவு செலவுத் திட்டத்திற்கு மன்றத்தின் முன்அங்கீகாரம் பெறப்படவில்லை. | பாதீட்டு அறிக்கைக்காக 2019 செப்தம்பர் 30 ஆந் திகதி அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டதாக | 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் பிரகாரம் வரவு, செலவுத் திட்டம் ஆண்டின் ஆரம்பமாவதற்கு முன்னர் அங்கீகாரம் பெற்றுக்கொள்ள வேண்டும். |

### 1.7 நிதியப் பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மன்றத்தின் தொழிற்பாட்டு மூலதன தேவை ரூபா 1.2 மில்லியனக இருந்த போதும் சபையின் நடைமுறைக் கணக்கில் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 62,878,499 ஆன மீதியொன்று காணப்பட்டதுடன் மிகை நிதியை செயற்திறனான செயற்பா டொன்றிற்கு பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை. | 2020 பெப்ரவரி 20 ஆந் திகதி ரூபா 44 மில்லியன் நிலையான வைப்புக்களில் ஈடுபடுத்தியதாக | மிகை நிதியை செயற் திறனான செயற்பா டொன்றிற்கு ஈடுபடுத்த முகாமைத்துவம் கவனம் செலுத்த வேண்டும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிப் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 59,465,917 மிகையாக இருந்ததுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 59,487,764 ஆக இருந்தமையால். முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 21,847 ஆன குறைவொன்று அவதானிக்கப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | மீளாய்வாண்டில் இனங்காணப்பட்ட வாகன விபத்துக்களிலிருந்து மரணங்கள் மற்றும் பாரிய விபத்துக்களுக்கு ரூபா 7,400,000 தொகை இழப்பீடாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் இக்கொடுப்பனவு 10 மாதங்கள் முதல் 36 மாதங்கள் வரையான காலவீச்சில் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இனங்காணப்படாத வாகனங்களிலிருந்து விபத்திற்குட்பட்ட நபர்களுக்காக இழப்பீட்டுக் கொடுப்பனவு முறைமையின் அறிவுறுத்தல் பத்திரத்தின் பிரகாரம் ஆகக்குறைந்தது 09 மாத காலஎல்லைக்குள் மேற்கொள்ளப்பட | மோதிவிட்டுச் தப்பிச்செல்லல் என உறுதிப்படுத்துதல் தீர்மானிக்கும் பொலிஸ் அறிக்கை யை வழங்குவதற்கு 06 மாதங்கள் அளவிலான காலம் எடுப்பதாக | 10 மாதங்கள் முதல் 36 மாதங்கள் வரையான காலவீச்சில் காணப்படுவதால் தாமதத்தை குறைக்கும் வகையில் செயற்படல் |

| | | |
|---|---|---|
| வேண்டிய போதிலும் 09 விண்ணப்பங்களுக்காக இழப்பீட்டுக் கொடுப்பனவு 10 மாதங்கள் முதல் 26 மாதங்கள் வரையான காலவீச்சில் தாமதம் இடம்பெற்றிருந்தமை அவதானிக்கப்பட்டது. | | |
| **(ஆ)** காப்புறுதி நிறுவனங்களிலிருந்து 02 சதவீத தொகை கொடுப்பனவு செய்வதற்கு இணங்கியிருந்த போதும்அறவிடுவதற்காக சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மூன்றாம் தரப்பு காப்புறுதியிலிருந்து 02 சதவீத தொகை கொடுப்பனவு செய்வதற்கு இணங்கியிருந்த போதும் இணக்கப்பாட்டு கடிதத்தை எழுத்து மூலம் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக | விரைவில் அச்செயற்பாட்டினை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென |

**3.2 செயற்பாட்டு வினைத்திறமையின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ)** இலங்கையும் கைச்சாத்திட்ட தரப்பினரொருவராக வீதி பாதுகாப்பு தொடர்பான ஐக்கிய நாடுகளின் அமைப்பின் முன்மொழிவின் நிறைவேற்றலின் பிரகாரம் அரசினால் நிறைவேற்ற வேண்டிய வீதிப் பாதுகாப்புக்கான தேசிய கொள்கையொன்றை தயாரித்து செயற்படுத்துமாறு பரிந்துரைக்கப் பட்டிருந்த போதும் 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அவ்வாறான கொள்கையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | தேசிய சபையை ஆணைக்குழுவொன்றாக மாற்றும் செயற்பாடு இன்னும் பூர்த்தி செய்யப்படாமையால் அப்பணியை நிறைவேற்ற மீளாய்வாண்டின் போதும் முடிவடையவில்லை என | வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய கொள்கையொன்று தயாரித்தல் தேசிய தேவைப்பாடாக இருப்பதால் இதற்கு முன்னுரிமை வழங்கி செயற்பட வேண்டுமென. |
| **(ஆ)** 2019 ஆம் ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் வீதிப் பாதுகாப்பு முகாமைப்படுத்தும் இயலளவு அபிவிருத்திக்காக 10 செயற்திட்டங்களை நிறைவேற்று வதற்காக 30 செயற்பாடுகள் குறிப்பிடப்பட்டிருந்ததுடன் அதில் 03 செயற்திட்டங்களுக்குரிய 11 செயற்பாடுகள் மாத்திரம் 100 சதவீதம் நிறைவேற்றப்படடிருந்தன. எஞ்சிய 07 செயற்திட்டங்கள் நிறைவேற்றல் பலவீனமான மட்டத்தில் இருந்தமை அவதானிக்கப்பட்டது. | நிர்வாக சபை நியமித்தலில் தாமதம், உயிர்த்த ஞாயிறு தாக்குதல், தேர்தலுக்கு திகதி குறிக்கப்பட்டமை காரணமாக சில செயற்திட்டங்களை நிறைவேற்ற முடியவில்லை. | திட்டமிடப்பட்ட வகையில் மன்றத்தின் செயலாற்றலை உயர் இயலளவில் பேணிச் செல்ல முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.3 நிதியத்தின் குறைப் பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் பிரகாரம் சபை ரூபா 73 மில்லியன் வருமானம் சம்பாதிக்கப்பட்டிருந்த போதும், மன்றத்தின் மீண்டெழும் செலவினங்களுக்காக 18.85 மில்லியனும் மூலதனச் செலவினத்திற்காக 54.15 மில்லியனுமாக ரூபா 73 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது, சபை ரூபா 74 மில்லியன் வருமானம் சம்பாதிக்கப்பட்டிருந்த போதும் சபையின் பணிகளுக்கு அதில் 15 மில்லியன் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மன்றத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நிதிய ஈடுபாடு குறைவாக இருந்தது. | மன்றத்தின் பொதுவான நிர்வாகத்திற்காகவும் வீதி விபத்துக்களை குறைப்பதற்கு இழப்பீடு கொடுப்பனவு செய்வதற்காகவும் நிதியம் பயன்படுத்தப்படுவதாக | மன்றத்தின் நோக்கங்கள் நிறைவேற்றுவதற்கு போதியளவு பணத்தை ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.4 மனித முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வீதிப்பாதுகாப்பு தொடர்பான தேசிய மன்றத்தை பலப்படுத்துவதற்காக போதியளவு பயிற்சி பெற்ற பதவியணியொன்றும் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளும் காணப்பட வேண்டிய போதும் போக்குவரத்து அமைச்சின் கீழ் செயற்படும் நிறுவனமொன்றாக இருந்ததுடன் இம்மன்றம் போக்குவரத்து அமைச்சு, இலங்கை புகையிரத திணைக்களம் மற்றும் இலங்கை போக்குவரத்து அசபைக்கு இணைக்கப்பட்ட 11 உத்தியோகத்தர்களையும் ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்யப்பட்ட ஒரு உத்தியோகத்தரையும் ஒரு அமைய தொழிலாளரையும் கொண்டுள்ளது. | போக்குவரத்து பாதுகாப்பு தொடர்பாகன தேவையான ஆணைக்குழுவொன்றாக மாற்றி பின்னர் நிரந்தர பதவியணியினரை ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | மன்றத்தின் நடவடிக்கைகளுக்காக தேவையான தகைமையான உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 நிகழ்சிநிரலின்'' பிரகாரம் ஒவ்வொரு அரச நிறுவனத்தினாலும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் மீளாய்வாண்டில் வீதிப் பாதுகாப்புக்கான தேசிய மன்றத்தினால் தமது விடயப்பரப்பிற்கு கீழ் வரும் செயற்பாடுகள் தொடர்பாக எவ்வாறு செயற்படவண்டுமென அறிந்திருந்தும் செயற்பாகள் பலவீனமாக இருந்ததாக அவதானிக்கப்பட்டது. | செயலாற்றலை அளவிடுவதற்காக தரவு முறைமையொன்றை றநிலைநிறுத்த நடவடிக்கை எடுத்தல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களுக்காக திட்டங்கள் தயாரித்து செயற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென. |